# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,392 — 1938 ம் ஸூ புரட்டாதிமீ 9 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 1,885 (மாத்தளை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1938 ம் ஸூ (செப்டம்பர்) புரட்டாதிமீ 9 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1938 ம் ஸூ (ஆகஸ்ட்) ஆவணிமீ 10 ந் தேதியிலன்று மாத்தளைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். எச். டீ. மென்டேர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசெண்டவர்கள், மாத்தளை.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மாத்தளை உதவி அரசாட்சி ஏசண்டவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளைவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணத்தில், மாத்தளை டிஸ்திறிக்கில், மாத்தளை வட பிரிவின் வகபனஹறபள்ளேசியபற்றுவவில் பண்ணம்பிட்டிய என்னும் கிராமத்திலுள்ள கீழ்க்கண்ட காணித்துண்டுகள் :—

பிரதமபடம் இல. A 478.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | உறுகெட்டவலஹேன (பிரதம வழிக்காக விடப்பட்டது) | 0 | 0 | 22 |
| 2 | ஷை (கன்சபாவ பாதைக்காக விடப்பட்டது) | 0 | 0 | 4 |
| 3 | உறுகெட்டவலமுக்கலான .. .. | 0 | 1 | 33 |
| 4 | ஷை (மீதண்ட ஓயாவுக்கும் பொக்குளைக்கும் விடப்பட்டது) .. | 0 | 1 | 21 |
| 5 | ஷை (பொக்குளைக்கு விடப்பட்டது) .. | 0 | 0 | 11 |
| | | 1 | 0 | 11 |

எல்லைகளாவன : வடக்கு-டம்புளையிலிருந்து மாத்தளைக்குப்போகும் பிரதம பாதையிலிருந்து கிரவெல்லைக்குப்போகும் கன்சபாவ வழி ; கிழக்கு-மீதண்ட ஓயாவும் பொக்குளையும் ; தெற்கு-பொக்குளை ; மேற்கு-டம்புளையிலிருந்து மாத்தளைக்குப்போகும் பிரதம பாதை.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் எறவ்வலவில் ஓர் குளிக்கும் கிணற்றுக்கு எனனும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இல A 884. குறிச்சி.—எறவ்வல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | முத்தெட்டுவேகும்புற | டேனிய, 3 வருஷஞ்சென்ற கொஹிலவுள்ளது .. | வெலிவத்தகே டொன டேவித், எறவ்வல | 0 | 0 | 1·40 |
| 2 | மஹாவத்த .. | 25 வருஷஞ்சென்ற தென்னங்காணியின் பகுதி, 10 வருஷஞ்சென்ற 1 கமுகுவும் இப்போவெட்டப்படும் ஒரு கிணறுமுள்ளது | சுரவீரஆராச்சிகே டொன் யொஹானிஸ் வெலிவத்தகே மறிஹாமி, இருபேரும் எறவ்வல | 0 | 0 | 1·30 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச்சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (ஒக்டோபர்) ஐப்பசி மாசம் 18 ந் தேதியிலன்று 10 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1938 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 5 ந் உ.

ஆர். மொனிபெனி.
உதவி அரசாட்சி ஏசன்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெலனகொட கிராமத்துக்கு ஒரு ரேட்டுப்போடுவதற்கு என்றும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகள் அஃதாவது :—

பிரதமபடத்து இல A 891. குறிச்சி—பனுகொட

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | குறுப்பிற்றியலந்த .. | தோட்டம், 4 வருஷஞ்சென்ற 1 தென்னையுள்ளது .. | ஹெற்றிஆராச்சிகே பபுசிங்கோ, ஹெற்றிஆராச்சிகே வெலுன்சிங்கோ, ஹெற்றிஆராச்சிகே கரோலிஸ் சிங்கோ, எல்லோரும் பனுகொட | 0 0 0·2 |
| 2 | கலபொடலந்த அல்லது குறுப்பிற்றியலந்த | தோட்டம், 20 வருஷம் துவங்கி 40 வருஷம்வரை சென்ற 22 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 7 தென்னையும், 3 வருஷஞ்சென்ற 1 தென்னங்கன்றும், 1 வருஷஞ்சென்ற 4 தென்னங்கன்றும், 20 வருஷஞ்சென்ற 2 கமுகுவும், 8 வருஷஞ்சென்ற 1 இற்றுல் மரமும், 5 வருஷந்துவங்கி 8 வருஷவரை சென்ற 3 கொடப்பொருமரமும், 4 வருஷஞ்சென்ற 1 டோம்ப மரமும், 3 வருஷஞ்சென்ற 1 ககமரமும், 10 வருஷஞ்சென்ற 1 கொறக்காமரமும், அடிப்பாதையின் பகுதிகளும், இரும்புக்கம்பியுள்ள வேலியின்பகுதியும், இரும்புக் கம்பி வேலிகளின் பகுதிகளும், இரு ஆழிகளின் பகுதிகளுமுள்ளது | விரப்புலிறடகே ஆறு பேர்ஞந்து அறுக்கொடறடகே சிதோறிஸ பெர்நாந்து, மேற்படி யுவானிஸ பெர்நாந்து, மேற்படி நன்டாபெர்ஞந்து மேற்படி பபியா பெர்ஞந்து, மேற்படி பி. எச். வயித்தியவர்தன வெதருள, மேற்படி கர்த்தேலிஸ் பெர்ஞந்து, மேற்படி நன்டோறிஸ பெர்ஞந்து, மேற்படி சுகதாஸபெர்ஞந்து, வெலிவித்திகே சாயககறடாகே பெபி பெர்ஞந்து எல்லோரும் பனுகொட அறுக்கொடறடாகே நன்றோனி பெர்ஞந்து, கெண்டலகொடிகறகே டேவித்அப்புவும், கமகே ஜேம்ஸ், இருபேரும் பனுகொட | 0 1 16·6 |
| 3 | கஸ்ாடேவத்த .. | தோட்டம், 30 வருஷஞ்சென்ற 1 பலாவுள்ளது .. | | 0 0 0·4 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (ஒக்டோபர்) ஐப்பசி மாசம் 19 ந் தேதியிலன்று 9 மணிக்கு ஹோமகம வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1938 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 5 ந் உ.

ஆர். மொனிபெனி.
உதவி அரசாட்சி ஏசன்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பபறெந்த (மத்திமம்) விலிருக்கும் வடிகாலில் ஒரு கிணறு உண்டாக்குகிற என்றும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 642. குறிச்சி.—பபறெந்த மத்திமம.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கலின்னஹேன .. | 3 வயதுள்ள 1 தென்னங்கன்றும், 8 வயதுள்ள 1 பிலாமரமும் 3 வயதுள்ள 1 கமுகமரமும், 1 கட்டுப்படாத கிணறுமுள்ள தோட்டம் | பபறெந்த மத்திமத்திலிருக்கும் நமியான் கொடகமகே டொன் சல்மன் யாப்பா | 0 0 2·5 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (ஒக்டோபர்) ஐப்பசி மாசம் 10 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு டிக்வல கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1938 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 6 ந் உ.

எஸ். டீ. குமாரசுவாமி.
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசன்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கேகாலை புளத்கொஹுபிட்டியா தெருவை 14 ம் கட்டையில் அகலிக்கிறதும் திருத்துகிறதும் என்றும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகள், அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 207. குறிச்சி—அளவத்துற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பொல்பிட்டியஇஹலகெல்லகும்புற .. | பாழ்நிலம் .. | எம். கிக்கிரிபண்டா, பொடிசிங்கோ, புஞ்சிரூள், பாலஹாமியும் மறுவும் | 0 0 16·10 |
| 2 | பொல்பிட்டியபஹலகெல்லகும்புற .. | ஷை .. | கே. லமிந்துவ, எஸ். பிள்ளி, டீ. எ. புஞ்சிசிங்கோ, புஞ்சிநூனையும் மறுவும் | 0 0 9·57 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 30 ந் தேதியிலன்று 10 மணிக்குக் கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1938 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 5 ந் உ.

ஆர். அலுவிஹாரா,
உதவி அரசாட்சி ஏசன்டு.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.